பதிவு எண் : M. 6311 ★ தொலைபேசி : 51331 நிறுவியது : 1953 ★ விலை 7 காசு ★ இலங்கையில் 10 சதம்

நம் நாடு

The 'Nam Nadu' — A Tamil Daily
The Official Organ of the D. M. K.

ஆசிரியர் : இரா. செழியன் எம். ஏ. எம்.பி.

மலர் : 16] சென்னை : ஆவணி 14 (29—8—68) வியாழன் ★ வெளியூர் : ஆவணி 15 (30—8—68) வெள்ளி [இதழ் : 64

நேரம் வருகையில் ...!

சென்னை, ஆக. 28—

சே. விநாயகம் :—" ஆண்டால் நன்றாக ஆளுங்கள்; இல்லையேல், ஆட்சிப்பீடத்திலிருந்து சற்றே நகர்ந்து நில்லுங்கள் எனக் கேட்டுக்கொள்கிறேன்."

அண்ணா :—" நண்பர் விநாயகத்தின் மன எரிச்சலை என்னால் புரிந்துகொள்ள முடிகிறது; நேரம் வருகிறபோது நானே விலகி நிற்கிறேன்."

—சட்டமன்றத்தில்

குற்றச்சாட்டில் புதுமை இல்லை!

பொறாமை உணர்ச்சியால் புழுங்காதீர்!

எரிச்சலைக் காட்டிக்கொள்ள எதனையும் கூறுவதா?

காங்கிரசார் செய்த கொடுமைகளை இன்னும் மறந்துவிடவில்லை --- தீர்ப்பளிக்கவேண்டியவர்கள் நம்பிக்கை எங்கள் பக்கமே இருக்கிறது --- எதிர்க் கட்சியினருக்கு முதலமைச்சர் அண்ணா தெளிவுரை

சென்னை, ஆக. 28---

" நாங்கள் இப்போது செய்துள்ள நல்ல காரியங்களை மக்கள் மறந்துவிட்டார்கள் என்று கருதுவீர்களானால் அது தவறு !

" 20 ஆண்டுக் காலத்தில் நீங்கள் செய்த கொடுமைகளை மக்கள் மறந்துவிட்டிருப்பார்கள் என்று கருதுவீர்களானால், அது அதைவிடப் பெரிய தவறு !

" நீங்கள் செய்த கொடுமைகளையும் நாட்டு மக்கள் மறக்கவில்லை -- நாங்கள் செய்த நன்மைகளையும் அவர்கள் மறந்துவிடவில்லை !

" சாரீரம் கெட்ட சங்கீத வித்வான், நல்ல சாரீரமுள்ள இளம் வித்துவானின் பாட்டைக் கேட்டுவிட்டு, அருகிலிருப்பவரிடம் 'என்ன பாடினான்; சுகமில்லை' என்று கூற, பக்கத்திலிருந்தவர் 'நீங்கள் என்ன சொல்கிறீர்கள்' என்று அவரைக் கேட்கும் அளவுக்குச் சாரீரம் போன சங்கீத வித்வானைப்போல், 'முன்னாள்' நிலைக்கு ஆனதாலேயே 'இந்நாள்' ஆட்சியாளர்களைக் குறை கூறிப் பேசினாலும், எந்நாளும் தீர்ப்பளிக்க வேண்டிய மக்களின் நம்பிக்கை எங்கள் பக்கமிருக்கிறது என்று நாங்கள் நம்புகிறோம் "

என்று முதலமைச்சர் அண்ணா அவர்கள், சட்டமன்றத்தில் காங்கிரசுக் கட்சியினரால் கொண்டு வரப்பட்ட நம்பிக்கையில்லாத் தீர்மானத்தின் மீது நடைபெற்ற விவாதத்திற்குப் பதிலளிக்கையில் சுட்டிக்காட்டி விளக்கினார். அவர் மேலும் கூறியதாவது :—

" நாங்கள் நல்லது செய்தாலும் திருப்தியடையாதவர்கள், எங்கள்மீது நம்பிக்கை வைத்திருப்பார்கள் என்று நாங்கள் எதிர்பார்க்கவில்லை.

" நாங்கள் எடுத்துச் சொல்வதில் நம்பிக்கையற்றிருந்தவர்களிடம், நம்பிக்கையை எதிர்பார்க்கவில்லை !

" கழகம் தோன்றிய நாளிலிருந்து நாங்கள் சொல்லிவருவதைக் காங்கிரசுக்காரர்கள் நம்பவில்லை; 'கழகத்திற்கும்—பொது மக்களுக்குமிடையே நல்ல தொடர்பு இருக்கிறது' என்று எடுத்துச் சொன்னோம் ---அதை நம்பவில்லை !

'உங்களைப் பொதுமக்கள் தேர்தலிலே நிராகரிக்கப் போகிறார்கள்' என்று நாங்கள் சொன்னபோதும் நம்பவில்லை !

உங்கள் ஆட்சியினால் ஏற்பட்ட அல்லல்களை எண்ணியெண்ணி மக்கள் குமுறிக்கொண்டிருக்கிறார்கள் என்று சொன்ன நேரத்திலும் எங்கள் பேச்சில் நம்பிக்கை கொள்ளவில்லை !

ஆகவே, இன்றையத் தினம்தான் எங்கள்மீது நம்பிக்கை இல்லாமலிருக்கிறார்கள் என்பதல்ல --- என்றைக்குமே எங்கள்மீது அவர்களுக்கு நம்பிக்கை இல்லை! ஆனால், இதற்கு நேர்மாறாகக் காங்கிரசுக்காரர்கள்மீது இன்றுவரை எனக்கு நம்பிக்கை இருக்கிறது !

நீங்கள் உங்கள் நடவடிக்கைகளைத் திருத்திக்கொண்டு நடந்தால், தமிழகத்தில் சனநாயகம் செம்மையுற முடியுமென்று நான் நம்புகிறேன்.

இங்கே பேசிய காங்கிரசு நண்பர்கள் இதுவரை சொல்லாத குற்றச்சாட்டுகளில் புதிதாக ஏதாவது சொல்லி இருக்கிறார்களா என்றால் இல்லை !

பழமொழி ஒன்று சொல்வார்கள் —'அரைத்த மாவையே அரைத்திருக்கிறார்கள்' என்று !

அரைத்த மாவையே அரைப்பதற்கு இரண்டு காரணங்களுண்டு ; ஒன்று — அரைக்கும் திறன் சரியில்லாத காரணத்தால் திரும்பத் திரும்ப அரைக்க வேண்டும்; இரண்டாவது — வேறு கிடைக்காத காரணத்தால் அரைத்ததையே அரைக்க வேண்டும் !

இதுவரையில் எடுத்துச் சொல்லப்பட்டுவந்த குற்றச்சாட்டுகளுக்கெல்லாம் ஏற்கனவே நாங்கள் அளித்த சமாதானத்தை -- விளக்கத்தை எதையுமே காங்கிரசுக்காரர்கள் கவனிக்கவில்லை என்று தெரிகிறது. அப்படிக் கவனித்தவர்களும், அவற்றை ஏற்றதாகப் புரியவில்லை. ஆகவே, அவர்கள் சொன்ன குற்றச்சாட்டுகளுக்கெல்லாம் மீண்டும் பதிலளிக்கத் தேவையில்லை என்று நான் கருதுகிறேன்.

சங்ககிரி சட்டமன்ற உறுப்பினர் வீரமணி அவர்கள் பேசும்போது ஒன்றைக் குறிப்பிட்டார்—'எங்கள்மீது உங்களுக்கு என்றைக்குத்தான் நம்பிக்கை இருந்தது--இன்றைக்கு நம்பிக்கை ஏற்பட ?' என்று கேட்டார் ; அது மெத்தப் பொருத்தமான கேள்வியாகும்.

நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டுவருவது, 'ஒரு சில குற்றச்சாட்டுகளைக் கூறுவதற்கு' என்பது ஒரு மரபாக இருக்கிறது.

ஆனால் இப்போது கொண்டு வரப்பட்டிருக்கின்ற நம்பிக்கையில்லாத் தீர்மானம், இந்த அரசுக்கு எந்த வகையிலும் மாசு மருவையோ, இழுக்கையோ ஏற்படுத்தும் என்று நான் கருதவில்லை !

இந்தியப் பேரரசின்மீது பலமுறை நம்பிக்கையில்லாத் தீர்மானங்கள் கொண்டுவரப்பட்டு--விவாதிக்கப்பட்டுத் தள்ளப்பட்டிருக்கின்றன. அதுபோல், இங்கேயும் கொண்டு வரப்பட்டிருக்கிறது.

எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் பேசும்போது, 'ஆறு மாதத்திற்கு ஒருமுறை இப்படிப்பட்ட தீர்மானங்கள் வரும்' என்று கூறி, 'அடுத்த ஆறு மாதத்தில் இன்னொரு நம்பிக்கையில்லாத் தீர்மானம் வரும்' என்பதனை மறைமுகமாகச் சுட்டிக்காட்டியிருக்கிறார்.

பொதுமக்களுக்கு எங்கள்மீது நம்பிக்கையிருக்கும் வரை--அவர்களுக்கு எங்கள்மீது உறுதியிருக்கும்வரை--எங்களுக்கும் பொது மக்களுக்குமிடையே இருக்கின்ற தொடர்பு எந்த விதத்திலும் பாதிக்காது.

நீங்களே எண்ணிப்பாருங்கள்—11 குற்றச்சாட்டுகளில், ஏதாவது இதுவரையில், சொல்லாத-புதிதான குற்றச்சாட்டுகளாக இருக்கிறதா என்பதை ! அவ்வாறு ஏதும் இல்லையே !

விலை போகாத சரக்கை இருட்டு நேரத்தில் கூவி விற்றுவிட்டு, வீட்டுக்குப் போகவேண்டுமென்று விரும்புகிற அங்காடிச் சரக்கைப்போல், முச்சந்திகளில் பேசியதையே -- மாநாடுகளிலே பேசியதையே --- ஊர்வலங்களிலே முழங்கியதையே--இப்போது மீண்டும் சொல்கிறீர்கள் !

தென் சென்னையில் நடைபெற்ற இடைத் தேர்தலின்போது இதே மாதிரி பேசினீர்கள் ; 'மக்கள் போதையிலிருந்து தெளிந்துவிட்டார்கள் ; உங்கள்மீது நம்பிக்கை இழந்துவிட்டார்கள்' என்று பேசினீர்கள் ; மக்கள் அளித்த தீர்ப்பு என்ன ?

சங்ககிரியிலும், தென்காசியிலும் நடைபெற்ற இடைத் தேர்தலில் மக்கள் தீர்ப்பின் பொருளென்ன ?

எங்கள்மீது மேலும் நம்பிக்கை இருக்கிறதென்பதை அறிவிக்கும் விதத்தில்தான் தீர்ப்பளித்திருக்கிறார்கள் !

எதிர்க் கட்சி உறுப்பினர்கள் பேசும்போது நான் அடிக்கடி குறுக்கிட்டுப் பேசியதற்காக வருத்தப்படுகிறேன் ; இருந்தாலும், தேவையற்ற பிரச்சினைகள் எடுத்துச் சொல்லப்படும்போது -- அனாவசியமான குற்றச்சாட்டுக்கள் கூறப்படும்போது -- அவையெல்லாம் பத்திரிகைகளிலே அச்சில் வந்து மக்கள் படிக்கும் நேரத்தில், 'ஏன் இவற்றுக்கெல்லாம் அமைச்சர்கள் விளக்கமளிக்கவில்லை' என்ற ஐயம் ஏற்பட்டுவிடும். அப்படிப்பட்ட ஐயப்பாடு ஏற்பட்டுவிடக்கூடாது என்பதற்

(4-ம் பக்கம் பார்க்க)

நம்பிக்கையில்லாத் தீர்மானத்துக்கு நேர்ந்த கதி!

காங்கிரசைத் தவிர ஆதரிக்க வேறு 'நாதி'யில்லை!

37 வாக்குகளை மட்டுமே பெற்றுத் தோற்றது

சென்னை, ஆக. 28—

அறிஞர் அண்ணா தலைமையில் உள்ள தி.மு.க. அமைச்சரவை மீது தமிழகச் சட்டமன்றத்தில் காங்கிரசுக் கட்சியினர் கொண்டுவந்த நம்பிக்கையில்லாத் தீர்மானம் தோற்றது.

இத்தீர்மானத்தின்மீது நான்கு நாள் விவாதம் நடைபெற்று, இன்று அண்ணா அவர்கள் விவாதங்களுக்குப் பதிலளித்துப் பேசியதும் தீர்மானம் வாக்கெடுப்புக்கு விடப்பட்டது.

தீர்மானத்தை ஆதரித்து வாக்களித்த ஒரே கட்சி காங்கிரசுக் கட்சிதான் ! தீர்மானத்தை எதிர்த்துத் தி.மு. கழகமும், தோழமைக் கட்சிகளான சுதந்தரா, வலது-இடது கம்யூனிஸ்டு, பி.சோ., ச.சோ., தமிழரசு, லீக், குடியரசு ஆகிய கட்சியினரும், சுயேச்சை உறுப்பினர்களும் வாக்களித்தனர்,

தீர்மானத்துக்கு எதிராக 156 வாக்குகளும், ஆதரவாக 37 வாக்குகளும் கிடைத்தன.

'தீர்மானம் தோற்றது' என்று அவைத் துணைத் தலைவர் அறிவித்ததும் அவையில் எழுந்த ஆரவாரம் அடங்கச் சிலநிமிட நேரம் பிடித்தது.

'நம் நாடு'

சிறப்பு மலர்

பேரறிஞர் அண்ணா அவர்களின்

60-ம் ஆண்டு பிறந்த நாளையொட்டி

14--9--68 அன்று வெளிவருகிறது

★

விலை 50 காசு

'நம் நாடு' :: சென்னை-13

நம்நாடு

ஆசிரியர்: இரா. செழியன்

திருவள்ளுவராண்டு 1999 ஆவணி 14 (29—8—68) வியாழன்

விளைவைக் காட்டும் முன்னறிவிப்பு

இந்தி பேசாத பகுதி மக்கள்மீது எப்படியும் இந்தியைத் திணித்தே தீருவது என்ற முடிவுடன், இந்தியைத் தாய்மொழியாகக் கொண்டவர்கள் செயல்பட்டு வருகின்றனர். இந்தி மொழி வெறியர்களுக்கு அரசியல் இலாபம் தேடுகின்றவர்களும் அச்செயலுக்கு உறுதுணையாக இருந்துவருகின்றனர்.

ஆங்கில மொழிக்குப் பதிலாக இந்தி மொழி செயல்படுத்தப் படுவதற்கான நிலையை இன்னும் அடைந்திடவில்லை என்ற உண்மை, மற்ற மொழியினருக்குத் தெரிந்திருப்பதைவிட இந்தி மொழியினருக்கு மிகுதியாகத் தெரியும். இந்தி மொழியின் இயலாமையைத் தாங்கள் தெரிந்திருந்தபோதிலும்கூட, அதை வெளிப்படையாக ஒப்புக்கொள்ள அவர்கள் விரும்புவது கிடையாது.

வடநாட்டைப் பொறுத்தவரையில், அரசியல் துறையில் ஏற்றம் பெறுவதற்கென்றே ஆங்கில மொழிக்கு எதிர்ப்பும், இந்தி மொழிக்கு ஆதரவும் காட்டிவரக்கூடியவர்கள் ஏராளம், ஏராளம். அந்த அளவுக்கு அரசியல் செல்வாக்கைப் பெற்றுத் தருகின்ற கருவூலமாக இந்தி மொழி அங்கு பயன்பட்டுவருகிறது. இதன் காரணமாகவே, வடநாட்டிலிருக்கின்ற காங்கிரசுக் கட்சி உள்பட அரசியல் கட்சிகள் அனைத்தும், இந்தி மொழிக்கு ஆதிக்கம் தேடிக் தருவதில் தங்களுக்குள்ளாகப் போட்டிப பந்தயத்தில் ஈடுபட்டுள்ளன.

அரசியல் கட்சிகள் அனைத்திலும், 'ஆங்கிலத்தை உடனடியாக விரட்டியடிக்க வேண்டும்' எனத் துடியாகத் துடித்துக்கொண்டிருக்கின்ற கட்சி, காலஞ் சென்ற டாக்டர் லோகியா அவர்கள் தலைமையில் இயங்கிவந்த சம்யுக்த சோஷலிஸ்டுக் கட்சியாகும். இத்துறையில் ஜனசங்கம்கூட இரண்டாம் இடத்தைத்தான் பெற்றுள்ளது,

இந்தி மொழி வெறி தலைக்கேறியுள்ள கட்சியான சம்யுக்த சோஷலிஸ்டுக் கட்சி, 'ஆங்கிலத்தினிடத்தில் உடனடியாக இந்தியைத் திணித்திட வேண்டும்' எனத் தீவிரமாக முயற்சித்துக் கொண்டிருக்கின்ற அதே நேரத்தில், தமிழ்—ஆந்திரம்—கேரளம் போன்ற மற்ற இந்திய மொழிகளிடத்திலும் வரைகடந்த பற்றுள்ளதுபோல் காட்டிக்கொண்டும் வருகிறது. மேலே குறித்துள்ள திராவிட இன மொழிகளின் வளர்ச்சியில், அம்மொழிகளைப் பேசி வருகின்ற மக்களுக்கு உள்ளதைவிட -- இருக்க வேண்டியதை விட -- பலமடங்கு கூடுதலான அக்கறை தனக்கு இருப்பதாகவும் அந்தக் கட்சி, விண்முட்ட கூவிக்கொண்டும் வருகிறது.

திராவிட இன மொழிகள்மீது பற்றுதலும், அம்மொழிகளின் வளர்ச்சியில் அக்கறையும் இருப்பதாகச் சம்யுக்த சோஷலிஸ்டுக் கட்சி கூப்பாடு போட்டுவருவதில் கடுகளவாவது உண்மை இருக்க முடியுமா என்பது சந்தேகமே. ஆங்கில மொழிக்குப் பதிலாக இந்திக்கு ஆதிக்கம் தேடுவதில் அக்கட்சிக்குள்ள தீவிரமான சிந்தனையும் செயலும், திராவிட மொழிகளின் ஏற்றத்தில் இருப்பது கிடையாது.

இந்தி மொழிக்கு ஆதிக்கம் தேடிவரும் தனது உள்ளக்கிடக்கையை, திராவிட மொழிகளைத் தாய்மொழியாகக் கொண்டிருப்பவர்களின் கருத்தில் படவிடாமல் மறைக்கும் நச்சு நினைப்பிலேயே, இந்தி மொழியுடன் மற்ற மொழிகளையும் இணைத்துப் புகழ்ந்து அக் கட்சி பேசிவருகிறது என்ற உண்மையை நாம் உணர்ந்துகொள்ள வேண்டும். இந்தி மொழி ஆதிக்கம் பெறுவதற்கு இடையூருக இருந்துவரக்கூடிய ஆங்கிலத்தை எதிர்த்து நிற்க, திராவிட மொழிகளைச் சேர்ந்தவர்களின் ஒத்துழைப்பைப் பெறுவதற்கேற்ற ஒரு தந்திர உபாயமாகவே திராவிட மொழிகளின் புகழை அந்தக் கட்சி தற்காலிகமாகப் பாடிவருகிறது எனக் கொள்ளுவது உண்மைக்கு மாருனது அல்ல.

திராவிட மொழிகளின் வளர்ச்சியில் தனக்கு அக்கறை இருப்பதுபோல் சம்யுக்த சோஷலிஸ்டுக் கட்சி பேசிவருவது முதல்தரமான அரசியல் மோசடி என்ற உண்மையை அனைவரும் உணர்ந்து கொள்வதற்குரிய நிகழ்ச்சி ஒன்று, டெல்லி மாநிலங்களவையில் நிகழ்ந்துள்ளது. இந்த மகத்தான உண்மை, சம்யுக்த சோஷலிஸ்டுக் கட்சியைச் சேர்ந்த இராஜ் நாராயணன் அவர்கள், அவையில் செயல்பட்டிருப்பதன்வாயிலாக வெளிப்பட்டிருக்கிறது.

சம்யுக்த சோஷலிஸ்டுக் கட்சியைச் சேர்ந்த இராஜ் நாராயணன் அவர்கள், இந்தி மொழியில் கேள்வி ஒன்றைக் கேட்டார்; அக்கேள்விக்கு, ஆந்திர மாநிலத்தைச் சேர்ந்த துணை அமைச்சர் பி. எஸ். மூர்த்தி அவர்கள் ஆங்கில மொழியில் பதிலளித்தார்.

ஆனுல், துணை அமைச்சர் ஆங்கிலத்தில் கூறிய பதிலை ஏற்க மறுத்து, ச. சோ. கட்சிக்காரரான இராஜ் நாராயணன் அவர்கள், தாம் இந்தி மொழியில் கேட்கப்பட்ட கேள்விக்கு இந்தி மொழியிலேயேதான் துணை அமைச்சர் பதிலளிக்க வேண்டும் எனப் பிடிவாதம் பிடித்தார். ஆங்கில மொழியில் கூறிய அமைச்சரின் பதிலை, அதே நேரத்தில் இந்தி மொழியிலும் கேட்டிடக்கூடிய வசதி மாநிலங்களவையில் அமைக்கப்பட்டிருக்கிறது. ச. சோ. கட்சியைச் சேர்ந்தவர், அமைச்சரின் பதிலை இந்தி மொழியில் தான் கேட்க நினைத்திருந்தால், அதற்குரிய பொறியின் உதவியில் கேட்டுக்கொண்டிருக்கலாம்.

ஆனுல், அந்த ச. சோ. உறுப்பினருக்கோ, மொழிபெயர்ப்புப் பொறியின் மூலம் இந்தி மொழி விளக்கத்தைக் கேட்க விரும்பவில்லை; 'ஆங்கில மொழியில் விளக்கம் தருவதற்குப் பதிலாக இந்தி மொழியிலேயே துணை அமைச்சர் பதிலளித்தாக வேண்டும்' என அடம் பிடிக்கலானுர்.

இந்தி மொழியும், ஏனைய இந்திய மொழிகளும் ஒத்த வளர்ச்சியை அடைந்திட வேண்டும்--அதிலும் இந்தியைப் போல் திராவிட மொழிகளும் ஏற்றம் பெற்றிட வேண்டும் என்பதுதான் சம்யுக்த சோஷலிஸ்டுக் கட்சியின் இலட்சியமாக இருக்குமபட்சத்தில், ச. சோ. கட்சியைச் சேர்ந்த இராஜ் நாராயணன் அவர்கள், தமது கேள்விக்கு ஆங்கில மொழியில் பதிலளித்த துணை அமைச்சர் மூர்த்தி அவர்களை, அவருடைய தாய்மொழியான ஆந்திர மொழியில் பதிலளிக்கும்படி கோரியிருத்தல் வேண்டும. அப்படி அமைச்சர், அவருடைய தாய்மொழியில் பதிலளிக்க அவைத் தலைவர் அனுமதி தர மறுக்கும்பட்சத்தில், தலைவரிடமிருந்து அதற்குரிய அனுமதியைப் பெற்றுத்தர இராஜ்நாராயணன் அவர்கள் முயற்சி எடுததுக்கொண்டிருக்க வேண்டும். அவ்வாறு அவர் முயற்சித்திருப்பாரானுல், அவர் முயற்சி வெற்றிபெற்ருலும் தோல்வியுற்ருலும், திராவிட மொழி வளர்ச்சியில் சம்யுக்த சோஷலிஸ்டுக் கட்சிக்கு உள்ளதாகக் கூறப்பட்டுவரும் அக்கறையை, வெளிப்படுத்தி உறுதிசெய்த பெருமை இராஜ நாராயணன் அவர்களுக்குக் கிடைத்திருக்கும்.

ஆனுல், இராஜ் நாராயணன் அவர்களோ அப்படிச் செயல்படவில்லை. 'இந்தி மொழியில்தான் பதிலளித்தாக வேண்டும்' என்று அமைச்சரிடம் அடம்பிடித்திருக்கின்ருர்.

இராஜ் நாராயணன் அவர்களின் பிடிவாதத்தைக் கண்ட துணைத் தலைமையமைச்சர் மொரார்ஜி தேசாய் அவர்கள் குறுக்கிட்டு, 'இந்தி மொழியில் தெளிவாகப் பதிலளிக்கத் துணை அமைச்சர் மூர்த்தி அவர்களால் இயலாது; எனவே, ஆங்கில மொழியில் அமைச்சர் பதிலளிப்பதைப் 'பொறுத்திடுக' என வேண்டிக் கொண்டிருக்கின்ருர்.

மாநிலங்களவையிலும், மக்களவையிலும், ஆங்கிலத்திலும். இந்தியிலும் பேசலாம் எனச் சட்டப்படி வரையறை செய்யப்பட்டிருக்கிறது. சட்டத்தின் மூலம் ஆங்கிலத்தில் பேசும் உரிமைக்கு உத்தரவாதம் தரப்பட்டிருக்கின்றபொழுதே, 'இந்தியில்தான் அமைச்சர் பதிலளிக்க வேண்டும்' என அடம்பிடிக்கின்ற இந்தி மொழியினர், 'இந்தி மொழியில் பேசத் தெரிந்தவர்கள்தான் நாடாளுமன்ற உறுப்பினர்களாகத் தேர்வு செய்ய -- தேர்தலில் நிற்கலாம்' என அரசியல் சட்டத்திலேயே திருத்தம் செய்து கொண்டாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை. இந்திக்காரர்களின் மொழி வெறி, எதிர்காலத்தில் எத்தகைய அஞ்சத்தக்க விளைவை உண்டாக்கக்கூடும் என்பதற்கு, இராஜ நாராயணன் அவர்களின் பிடிவாதம் ஒரு முன்னறிவிப்பாகும்.

—கா. க.

வெளிநாட்டில் வாழும் நாகர் தலைவர் பிஜோ

அரசுடன் பேச்சுவார்த்தை நடத்தவேண்டுமாம்

நாகர்கள் மாநாட்டு முடிவு

கோகிமா, ஆக. 26—

கடந்த சனியன்று நடந்து முடிந்து விட்ட அனைத்து நாகர்கள் மாநாடு, இரு முக்கிய முடிவுகளை எடுத்துள்ளது; ஒன்று— 'வெளிநாட்டில் வாழும் நாகர் தலைவர் பிஜோ இந்தியாவுக்குத் திரும்பிவந்து இந்திய அரசுடன் பேச்சுவார்த்தை நடத்தவேண்டும்' என்பதாகும்.

இன்னென்று— 'நான்கு ஆண்டுகட்குமுன் நாகர் பிரச்சினை எப்படி இருந்ததோ அதன் அடிப்படையில் காரியமாற்ற வேண்டும்' என்பதாகும்.

நிறைவேற்றப்பட்டிருக்கும் முக்கிய அரசியல் தீர்மானத்தில், 'நாகர் தேசியக் கவுன்சில் இந்திய அரசுடன் பேச்சுவார்த்தையைத் தொடர்ந்து நடத்தவேண்டும்' என்று கேட்டுக்கொண்டிருக்கிறது.

இந்தக் கவுன்சிலுக்குத் தலைவர் பிஜோ ஆவார். மேலும் தனது தலைவனின்றி, கட்சி, பேச்சுவார்த்தையில் ஈடுபடுவது பொருளற்றதாகும் என்றும் அது கருத்துத் தெரிவித்திருக்கிறது.

"பேச்சுவார்த்தை துவங்குவது என்ருல், நான்கு ஆண்டுகட்குமுன்பிருந்த நிலையிலிருந்தே துவங்க வேண்டும்" என்றும் இன்னெரு தீர்மானம் கூறுகிறது. இதன் மூலமாக இதுவரை நடைபெற்ற பேச்சுவார்ததைகளெல்லாம் பயனற்றதாகப்போய்விட்டன.

மேலும், 'இந்திய யூனியனுக்கு உட்பட்டதுதான் நாகர் பிரச்சினை' என்று ஒத்துக்கொள்வதன் அடிப்படையிலேயே பேச்சுவார்த்தை நடைபெறவேண்டும் என்று இந்திய அரசு வற்புறுத்திக் கூறிவருவதற்கும் இது முரணுக உள்ளது.

திருச்சி தீ விபத்திற்குத் தரப்பட்ட நிவாரணம்

சென்னை, ஆக. 28—

"திருச்சி மாவட்டத்தில் 14-6-68 முதல் 14—8—68 வரையில் 11 தீவிபத்துக்கள் நடைபெற்றன; 12 பேர் உயிரிழந்தனர்; நிவாரணத் தொகையாக ரூ. 46,840 வழங்கப்பட்டது"

என சட்டமன்றத்தில், உணவு அமைச்சர் கே. ஏ. மதியழகன் தெரிவித்தார்.

'சனநாயகத்திற்குப் புறம்பான செயல்'

'எதேச்சாதிகாரப் போக்கில் டெல்லி செயல்படுகிறது'

புதுவைச் சட்டமன்றக் கூட்டம் திடீரென ஒத்திவைப்பு --- பரூக் மரைக்காயர் கடுந்தாக்கு

புதுச்சேரி, ஆக. 29—

இன்று நடைபெறவிருந்த புதுவைச் சட்டமன்றக் கூட்டத் தொடரை, மாநில ஆளுநர், செப்டம்பர் 12-ம் நாளுக்குத் தள்ளிவைத்தார்.

மத்திய அரசின் உள்துறை அமைச்சர் சவான் கேட்டுக்கொண்டதற்கிணங்க இந்த உத்தரவு பிறப்பிக்கப் பட்டிருக்கிறதாம்.

சட்டமன்றக் கூட்டத் தொடரை ஒத்திவைத்திருப்பதை ஐக்கிய சனநாயக முன்னணித் தலைவர் பரூக் மரைக்காயர் கண்டித்துள்ளார்; ஆளுநருக்கு எழுதியுள்ள கடிதமொன்றில்,

"இது ஓர் எதேச்சாதிகாரமான நடவடிக்கை; மத்திய அரசு, அதிகாரத்தைத் துஷ்பிரயோகம் செய்துவிட்டது; இது, சனநாயகத்தைக் கேலிக்கூத்தாக்கும் செயலாகும்.

"காங்கிரசு அமைச்சரவையைக் காப்பாற்றுவதற்கே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருக்கிறது; இது, சனநாயகத்திற்குப் புறம்பானதாகும்"

என்றெல்லாம் குறிப்பிட்டுள்ளார்.

அறிக்கை ஒன்றில் பரூக் மரைக்காயர் கூறியிருப்பதாவது:—

"காங்கிரசுக் கட்சி எண்ணிக்கைப் பலத்தை இழந்துவிட்ட இதுபோன்ற நிலைமையில் காங்கிரசு அமைச்சரவையை 'டிஸ்மிஸ்' செய்துவிட்டு, புதிய அமைச்சரவை அமைக்கும்படி ஐக்கிய சனநாயக முன்னணித் தலைவரை ஆளுநர் அழைத்திருக்க வேண்டும்."

டெல்லிக்குத் தந்தி

மத்திய அரசுக்கு பரூக் மரைக்காயர் அனுப்பியுள்ள தந்தி ஒன்றில் குறிப்பிட்டிருப்பதாவது:—

"சட்டமன்றக் கூட்டத் தொடரை ஒத்திவைப்பதன் மூலம், தான் இழந்துவிட்ட பலத்தை மீண்டும் பெற காங்கிரசுக் கட்சி முயற்சி செய்துகொண்டிருக்கிறது."

"திட்டப்படி, சட்டமன்றக் கூட்டத்தை 29-ம நாளன்று சட்டமன்றக் கூட்டத்தை நடத்தும்படி ஆளுநருக்கு உத்தரவிட வேண்டும்."

புதுவை லெப்டினன்ட்-கவர்னர் எஸ். எஸ் சீலத்திற்கு எழுதியுள்ள கடிதத்தில் அவர் கேட்டுக்கொண்டிருப்பதாவது:—

"புதுவையில் வெங்கடசுப்பா ரெட்டியாரை முதலமைச்சராகக் கொண்ட காங்கிரசு அமைச்சரவையை உடனடியாகக் கலைக்க வேண்டும்.

கட்சி மாறிய நான்கு காங்கிரசு உறுப்பினர்களின் விலகல் கடிதங்களைக் கவர்னரிடம் பரூக் மரைக்காயர் கொடுத்தார்.

"சட்டமன்றக் கூட்டத்தைத் தள்ளிவைக்குமாறு கோரிக்கை வந்தால் அதற்கு இணங்கவேண்டாம்" எனக் கேட்டுக்கொண்டார்.

குடும்பக் கட்டுப்பாடு

விநாயகம் வழிகாட்டுவாரா?

சென்னை, ஆக. 28—

"குடும்பக் கட்டுப்பாட்டிற்காக அறுவைச் சிகிச்சை செய்துகொண்டவர்களின் குடும்பங்களுக்கு டிரான்சிஸ்டர் ரேடியோவை பரிசளிக்கும் திட்டம் எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை; பத்திரிகையில் அப்படி வந்ததாகச் சொல்லப்படும் செய்தி வெறும் பத்திரிகைச் செய்தியேயாகும்"

என்று சுகாதார அமைச்சர் சாதிக் பாட்சா, சட்டமன்றக் கேள்வி நேரத்தில் கூறினுர்.

'அமைச்சர்களில் யார் யார் குடும்பக் கட்டுப்பாட்டினை அனுசரிக்கிருர்கள்? அதனுல் என்ன பலன் ஏற்பட்டிருக்கிறது என்ற அனுபவத்தைக் கூறமுடியுமா?"

என்று காங்கிரசு உறுப்பினர் கே. விநாயகம் கேட்டார்.

"கனம் உறுப்பினரே இதில் எங்களுக்கு வழிகாட்டுவார் என்று நம்புகிறேன்"

என்று அமைச்சர் சாதிக் பாட்சா பதிலளித்ததும் அவையில் சிரிப்பொலி எழுநதது.

பொதுமக்கள் விருப்பம் நிறைவேற்றப்பட்டது

சென்னை, ஆக. 28—

"பூவிருந்தவல்லி சப்-ரிஜிஸ்திரார் அலுவலகத்தைக் காஞ்சிபுரம் தலைமைச் செயலகத்துடன் இணைக்காமல் சென்னைத் தலைமைச் செயலகத்துடன் இணைக்க வேண்டும் என்று பொதுமக்களிடமிருந்து முறையீடு வந்ததன்பேரில், சென்னைத் தலைமைச் செயலகத்துடனேயே அதனை இணைக்க ஆணை பிறப்பிக்கப் பட்டுவிட்டது"

என்று, சட்டத் துறை அமைச்சர் திரு. மாதவன் சட்டமன்றக் கேள்வி நேரத்தில் தெரிவித்தார்.

பதவி உயர்வளிப்பதில் ஓரலகு முறை!

மூன்று துறைகளில் அமுல்

சென்னை, ஆக. 28—

"கண்காணிப்பாளர்கள் வகைக்கு உதவியாளர்கள் பதவி உயர்வுபெறும் பொருட்டு, ஓரலகு (Single unit) முறையினைச் செயல்படுத்த வேண்டுமெனத் தலைமைச் செயலக அரசிதழ் பதிவில்லா ஊழியர்கள் சங்கம் முறையிட்டிருக்கிறது; அதன்பேரில், சட்டத்துறை—நிதித்துறை—சட்டமன்றத் துறை ஆகியவற்றில் ஓரலகு முறை செயல்படுத்தப்பட்டிருக்கிறது"

என்று முதலமைச்சர் அண்ணா அவர்கள், சட்டமன்றத்தில், கேள்வி ஒன்றுக்குப் பதிலளித்தார்.

புதுவை அரசுக்குத் தமிழகத்து அதிகாரி

சென்னை, ஆக. 28—

"புதுவை அரசின் நிதித் துறைச் செயலாளராக நியமிக்கப்படுவதற்காகத் தமிழக நிதித் துறையைச் சேர்ந்த அதிகாரி ஒருவரை அனுப்பி உதவவேண்டும் என்று புதுவை அரசு கேட்டுக்கொண்டதன்பேரில், அச்சுதன் நாயர், சுப்பிரமணியம் என்னும் இரண்டு பேர்களை இந்த அரசு புதுவை அரசுக்குப் பரிந்துரைத்தது; சுப்பிரமணியம் என்பவரை புதுவை அரசு ஏற்றுக்கொண்டது"

என்று முதலமைச்சர் அண்ணா அவர்கள், சட்டமன்றத்தில், ஒரு கேள்விக்குப் பதிலளித்தார்.

வடக்கே இரகசிய ஆயுதத் தொழிற்சாலை

போலீசார் கண்டுபிடிப்பு

மாங்கீர், ஆக. 28—

இங்கிருந்து மூன்று மைல் தொலைவில் உள்ள சோகார்ப்பூர் என்னும் கிராமத்தில் இயங்கிவந்த இரகசிய ஆயுதத் தொழிற்சாலை ஒன்றைப் போலீசார் கண்டுபிடித்தனர்.

அங்கிருந்து, செய்து முடிக்கப்பட்ட ஒரு துப்பாக்கியையும், அரைகுறையாகச் செய்யப்பட்டிருந்த 4 துப்பாக்கிகளையும் போலீசார் கைப்பற்றினர்; ஒரு நபரையும் கைது செய்துள்ளனர்.

கள்ளக்கடத்தல்காரர்களுக்கும் கிரிமினல் குற்றவாளிகட்கும் இந்தத் தொழிற்சாலை ஆயுதம் விற்றுவந்திருக்கக்கூடும் எனப் போலீசார் சந்தேகப்படுகிறார்கள்.

விழுப்புரம் வட்ட தி.மு.க. தேர்தல்

விழுப்புரம் வட்ட தி. மு. கழகத் தேர்தல் ஏற்கனவே அறிவித்திருந்தபடி, 1—9—68 காலை 10 மணிக்கு, விழுப்புரம் முனிசிபல் பயணியர் விடுதியில் நடைபெறும்.

அவைத் தலைவர் பொறுப்புதவிர, மற்ற எல்லாப் பொறுப்புகளுக்கும் தேர்தல் நடைபெறும். தேர்தல் ஆணையாளர்: தோழர்: சா. கணேசன் எம்.சி.

—தலைமைக் கழகம் (தி.மு.க.)

நாகர்கோவில் பெருநகரக் கழகத் தேர்தல்

4-9-68 காலை 10-மணிக்கு

ஏற்கனவே விடுத்திருந்த அறிவிப்பினைத் தொடர்ந்து நாகர்கோவில் பெருநகரக் கழகத் தேர்தல் 4-9-68 புதன் காலை 10-மணிக்கு வடசேரி பயணிகள் விடுதியில் நடைபெறும்.

ஏற்கனவே அறிவிக்கப்பட்டிருந்த நாளுக்குப் பிறகு அனுப்பி வைத்துள்ள எந்த ஒரு விண்ணப்பத் தாள்களும் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

—தலைமைக் கழகம் (தி.மு.க.)

விளக்கத்தைப் பெற்றவர் திரும்பப் பெறுகிறார்!

'தரப்பட்ட தகவல் அப்படிப்பட்டது' என்கிறார் எதிர்க் கட்சித் தலைவர்

கருத்திருமன் :— "தமிழ்ப் பாட மொழி பற்றி இங்கு பேசுகின்ற ம.பொ. சிவஞானம் அவர்களின் பிள்ளை விவேகானந்தாக் கல்லூரியில் சேரும்போது, ஆங்கிலப் பாட மொழி வகுப்பில் இடம் கேட்டிருக்கிறார்; 'இல்லை' என்றதும், தமிழ்ப் பாட மொழி வகுப்பில் சேர்ந்திருக்கிறார்."

ஓர் உறுப்பினர் :— "அவையில் இல்லாத ஒருவரைப் பற்றிப் பேசலாமா?"

ம. பொ. சிவஞானம் :— "துணிவு இருந்தால் எதிர்க் கட்சித் தலைவர் ஆதாரங்களுடன் பேசட்டும்; நேற்று—இன்று மட்டுமல்ல; என் பிணம் போகின்ற வரைக்கும் எனது தமிழ் உணர்ச்சி மங்காது -- மறையாது!"

கருத்திருமன் :— "எனக்கு வந்த தகவலை வைத்துத்தான் சொல்கிறேன்."

ம.பொ. சிவஞானம் :— "ஆங்கிலப் பாட மொழி வகுப்பில் நான் யாரையும் சேர்த்ததில்லை. இன்னும் என்னை அணுகியவர்களுக்குக்கூட ஆங்கிலப் பாட மொழி வகுப்புக்குச் சிபாரிசு தர மறுத்திருக்கிறேன்; இந்த நிலையில் ஒரு குற்றச்சாட்டைச் சாட்டுவது சரியா?"

கருத்திருமன் :— "எனக்கு வந்த தகவல்படி நான் பேச......

(உறுப்பினர்கள் பலர் குறுக்கீடு)

ம. பொ. சிவஞானம் :— "எனது 42 ஆண்டு பொதுவாழ்வில் இப்படியொரு தவறான குற்றச்சாட்டு சாட்டப்பட்டதில்லை; தவறாகக் குற்றஞ்சாட்டிய கருத்திருமன், அந்தத தவறை ஒப்புக்கொள்ள வேண்டும் -- திரும்பப் பெற வேண்டும் -- வருத்தமும் தெரிவிக்க வேண்டும்."

அண்ணா :— "கருத்திருமன் அவர்கள் யாருடைய பிள்ளையைப் பற்றிச் சொல்கிறாரோ அந்தப் பிள்ளையின் தந்தை கூறுகிற விளக்கத்தை ஏற்றுத் திரும்பப் பெறுவதில் தவறு ஏதுமிருக்காது."

கருத்திருமன் :— "அவர் சிபாரிசு செய்த பிள்ளை என்றுதான் கூறினேன்."

உறுப்பினர்கள் :— "மாற்றிச் சொல்கிறார் -- மாற்றிச் சொல்கிறார்."

அமைச்சர் கருணாநிதி :— "முதலில் கருத்திருமன் அவர்கள் பேசும்போது, 'ம. பொ. சிவஞானத்தின் பிள்ளை' என்றுதான் கூறினார்."

ம. பொ. சிவஞானம் :— "மேலும் ஒன்று கூறிக்கொள்வேன்; எனது குடும்பத்தில் எனது மகனோ, மகளோ உயர்நிலைப் பள்ளியைத் தாண்டிச் செல்லவில்லை; கல்லூரியில் அவர்களைப் படிக்கவைக்கும் அளவுக்கு எனது குடும்ப நிலை இல்லை; எனது குடும்பம் அரசியல் வாழ்வினால் அரிக்கப்பட்ட குடும்பம்; ஆகவே, தவறான தகவலைத் தந்த எதிர்க் கட்சித் தலைவர் அதைத் திரும்பப் பெற வேண்டும் -- எனது கண்ணியத்தை உயர்த்துவதற்காக அல்ல -- அவரது கண்ணியத்தை உயர்த்துவதற்காக இதைக் கேட்கிறேன்."

கருத்திருமன் :— "தவறான தகவல் எனக்குத் தரப்பட்டிருக்கிறது என்று நினைக்கிறேன்; அதை விசாரித்துத் தவறாக இருந்தால் நாளையதினம் திரும்பப் பெறுகிறேன்."

அண்ணா :— "இப்படித் தவறான தகவல் தருவது எவ்வளவு தூரம் தவறாக மாறிவிடும் என்பதற்கு ஒரு உதாரணம் கூறுகிறேன். எனக்கு, பரிமளம் என்ற ஒரு மகன் உண்டு; அந்தப் பெயர் காரணமாக நமது விநாயகம் --- பெண் என்று நினைத்துக்கொண்டு -- ஒரு பொதுக்கூட்டத்தில், 'அண்ணாதுரைக்குப் பரிமளம் என்ற ஒரு பெண் இருக்கிறது; அந்தப் பெண்ணை அவர் இந்திப் பள்ளிக்கூடத்தில் படிக்கவைக்கிறார்' என்று பேசிவிட்டார். பிறகு ஒருநாள் என் வீட்டிற்கு விநாயகம் போன் செய்திருக்கிறார்; பரிமளமே அந்தப் போனை எடுத்திருக்கிறான்; 'யார்' என்று விநாயகம் கேட்டிருக்கிறார்; 'பரிமளம்' என்று அவன் சொன்னதும், 'அடடே --- நீ ஆண்தானா --- பெண் என்று நினைத்தேன்' என்றாராம்!"

விநாயகம் :— "முதலமைச்சர், தனது கற்பனைத் திறத்தோடு பேசுகிறார்; எனக்குப் பரிமளத்தைத் தெரியாதா என்ன? நான் அப்படிப் பேசவில்லை!"

அண்ணா :— "'இல்லை, இல்லை; நீங்கள் அப்படிப் பேசியிருக்கிறீர்கள்."

ம. பொ. சிவஞானம் :— "கருத்திருமன் தனது வருத்தத்தை இப்போதே தெரிவிப்பது நல்லது."

கருத்திருமன் :— "அப்படித் தகவல் எனக்குத் தரப்பட்டதால் பேசினேன். பெரியவர் வருத்தப்படுவாரானால், நான் திரும்பப் பெற்றுக் கொள்கிறேன்."

—சட்டமன்றத்தில் : (28—8—68)

WANTED

CHIEF ENGINEER For SUGAR FACTORY

Applications, indicating age, Qualifications, Experience, pay drawn at present and expected, time required to join duty; if selected etc., are invited for the post of a Chief Engineer to reach the undersigned on or before 15-9-1968.

QUALIFICATION REQUIRED:

A degree in Mechanical and/or Electrical Engineering of any recognised University with 10 years experience in the erection and maintenance of Sugar Factory.

N. SRINIVASAN, B.A.,
General Manager,
THE KALLAKURICHI CO-OPERATIVE SUGAR MILLS LIMITED,
Moongilthuraipattu Post, (Via) Sankarapuram,
Kallakurichi Taluk (South Arcot District).

புதுவை பெருநகரக் கழக மறு தேர்தல்

புதுவை பெருநகரக் கழக மறு தேர்தல் 1—9—68 ஞாயிறு காலை 10-மணிக்கு புதுவை நகர் செஞ்சிச்சாலைத் திருமண மண்டபத்தில் நடைபெறும்.

செயலாளர் ஒருவர், பத்து மாவட்டப் பிரதிநிதிகள் ஆகிய பொறுப்புகளுக்கு மட்டும் மறு தேர்தல் நடைபெறும்.

செயலாளர் பொறுப்புக்கு மட்டும் 28—8—68-ம் நாளுக்குள் தலைமைக் கழகத்திற்குச் சேரும்வகையில் விண்ணப்பத் தாள்கள் உரிய கட்டணத்துடன் அனுப்பி வைக்கவேண்டும்.

மாவட்டப் பிரதிநிதிகளுக்கு ஏற்கனவே அனுப்பியுள்ள விண்ணப்பத் தாள்களின் அடிப்படையில் நடைபெறும். தேர்தல் ஆணையாளர்: தோழர் கே. கோவிந்தசாமி எம்.சி.

—தலைமைக் கழகம் (தி.மு.க.)

கழகத் தேர்தல்

விளவங்கோடு வட்டம்

விளவங்கோடு வட்டக் கழகத்திற்கு மாவட்டப் பிரதிநிதி ஒருவருக்கான தேர்தல் மட்டும் 5—9—68 பிற்பகல் 4-மணிக்குக் குழித்துறை பயணிகள் விடுதியில் நடைபெறும், இதற்குரிய விண்ணப்பத் தாள்களை 31—8—68-ம் நாளுக்குள் தலைமைக் கழகத்திற்கு அனுப்பி வைக்கவேண்டும்.

—தலைமைக் கழகம் (தி.மு.க.).

அகத்தீசுவரம் வட்டம்

அகத்தீசுவரம் வட்டக் கழகத்திற்குச் செயலாளர் ஒருவர், மாவட்டப் பிரதிநிதி ஒருவர் ஆகிய பொறுப்புகளுக்கான தேர்தல் 5—9—68 காலை 10 மணிக்கு தெங்கம்புதூர் தியேட்டரில் நடைபெறும்.

செயலாளர் பொறுப்புக்கும், மாவட்டப் பிரதிநிதி பொறுப்புக்கும் புதிய விண்ணப்பத் தாள்கள், 31—8—68-க்குள் தலைமைக் கழகத்திற்குச் சேரும் வகையில் அனுப்பி வைத்தல் வேண்டும்.

—தலைமைக் கழகம் (தி.மு.க.)

தோவாளை வட்டம்

தோவாளை வட்டக் கழகத்திற்குச் செயலாளர் ஒருவர், துணைச் செயலாளர் ஒருவர், பொருளாளர் ஒருவர், மாவட்டப் பிரதிநிதிகள் 10 பேர், வட்டக் கழகச் செயற்குழு உறுப்பினர்கள் 14 பேர் ஆகிய பொறுப்புக்களுக்கான தேர்தல் 6—9—68 வெள்ளி காலை 10 மணிக்கு தடிக்காரன் கோணம் பயணிகள் விடுதியில் நடைபெறும்.

செயலாளர், துணைச் செயலாளர், பொருளாளர் பொறுப்புக்களுக்கு மட்டும் புதிய விண்ணப்பத் தாள்கள் 31-8-68-க்குள் தலைமைக் கழகத்திற்குச் சேரும் வகையில் அனுப்பி வைக்க வேண்டும்.

—தலைமைக் கழகம் (தி.மு.க.)

காங்கிரசு அமைச்சர்கள் சென்றபோது செய்ததுதான் என்ன?

கருத்திருமன் :— "முன்பு எங்கள் கட்சி அமைச்சர்கள் வடக்கே செல்லும்போதெல்லாம், தி. மு. கழகத்தினர், 'காவடி தூக்கிச் செல்கிறார்கள்' என்று கூறினார்கள். இப்போது --- கடந்த வாரம் கூட -- பொதுப்பணி அமைச்சர் கூட வடக்கே காவடி தூக்கினாரே!"

அமைச்சர் கருணாநிதி :— "நான் வடக்கே சென்றது ஹேமாவதி திட்டம் பற்றி விவாதிக்க -- மத்திய அமைச்சர் அழைத்ததின் பேரில்தான் சென்றேன்; அவர்கள் முன்பு நான் ஒன்றும் கெஞ்சவில்லை!

"அது மட்டுமல்ல; மொழிப் பிரச்சினையில் எங்கள் அமைச்சர் மாதவன், டில்லி அமைச்சர்கள் முன்பு 'தமிழகம் இந்தியை ஒருபோதும் ஏற்காது' என்று முழங்கினாரே---உங்கள் அமைச்சர்கள் டில்லி சென்றபோது அப்படி ஏதாவது பேசியிருக்கிறார்களா?"

கருத்திருமன் :— "எங்கள் அமைச்சர்கள் சென்றது நாட்டு நலனுக்காக! நீங்கள் சென்றது நாட்டைக் குட்டிச்சுவராக்க!"

அமைச்சர் :— "என்ன ஆதாரம்?"

கருத்திருமன் :— "ஹேமாவதித் திட்டத்தை ஒப்புக்கொண்டு வந்தீர்களே--அதன்படி அவர்கள் அணை கட்டி, அதில் போதுமான அளவு நீர் அவர்கள் எடுத்துக்கொண்டு நமக்கு நீர் விடுவது என்பது சாத்தியமா?'

அமைச்சர் கருணாநிதி :— "அப்படியானால், நீங்கள் அந்தத் திட்டத்தை எதிர்க்கிறீர்களா?"

கருத்திருமன் :— "இல்லை, இல்லை; நான் ஆதரிக்கிறேன்; நான் கூறியதெல்லாம் அதிலிருக்கிற சங்கடங்கள்!"

என்ன கூறுகிறார் எதிர்க் கட்சித் தலைவர்?

கருத்திருமன் :— 'தி. மு. கழகத்தின் பச்சோந்தித் தன்மை பற்றி நாடு அறியும்; முதலில், 'நாட்டுப் பிரிவினைவேண்டும்' என்றார்கள்; பிறகு கைவிட்டுவிட்டார்கள்."

அண்ணா :— "முன்பு நாங்கள் கொண்டிருந்த பிரிவினைக் கோரிக்கை நாட்டு நலனுக்கு உகந்ததாக இல்லை என்பதால், அந்தக் கோரிக்கையைக் கைவிட்டுவிட்டோம்; அது தவறு என்றால், முன்பு பாகிஸ்தான் கோரிக்கை எழுந்தபோது, 'எங்கள் பிணத்தின்மீது நடந்துதான் பாகிஸ்தான் பெற வேண்டும்' என்று காங்கிரசுக்காரர்கள் பேசினார்களே --- அதைப்பற்றி எதிர்க் கட்சித் தலைவர் என்ன கூறுகிறார்?"

கருத்திருமன் :— "முதலமைச்சர் அவர்கள் எப்போதும் இப்படித்தான்; நாம் ஏதாவது ஒன்றைச் சொன்னால் அவர் ஏதாவது ஒன்றைக் கூறுவார்."

—சட்டமன்றத்தில் 28—8—68

சட்டமன்ற மேலவை ஒத்திவைப்பு

சென்னை, ஆக. 28—

தமிழகச் சட்டமன்ற மேலவை காலவரையறையின்றி இன்று ஒத்திவைக்கப்பட்டது.

சட்டப் பேரவையில் ஏற்கனவே நிறைவேறிய ஏழு மசோதாக்களையும் மேலவை நிறைவேற்றியது.

நீலகிரி மாவட்டக் கழகத் தேர்தல்

நீலகிரி மாவட்ட தி. மு. கழகத் தேர்தல் 31—8—68 சனிக்கிழமை காலை 10-மணிக்கு உதகை நகர தி. மு. கழகக் கட்டிடத்தில் நடைபெறும்; தேர்தல் ஆணையாளர்: தோழர் வை. இரத்தினவேலு பி.ஏ.

—தலைமைக் கழகம் (தி. மு. க.)

நம்பிக்கையில்லாத் தீர்மானத்துக்கு அண்ணா பதில்

(1-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

காகத்தான், நான் குறுக்கிட்டு விளக்கம் கூறினேன்.

அப்படி நான் கூறியபோது, பலவற்றைத் 'திரும்பப் பெற்றுக் கொள்கிறோம்' என்று பெருந்தன்மையோடு கூறினீர்கள்; சிலவற்றைப் பற்றி, 'யோசிக்கிறோம்' என்றீர்கள்; விளக்கங்களின் பல பகுதிகளை ஏற்றுக் கொண்டீர்கள்; என்றாலும், ஒருவர் பேசிய பிறகு தொடர்ந்து பேசியவர்களும் அதையே திரும்பத் திரும்பப் பேசினீர்கள்.

தீ விபத்துப் பற்றி எத்தனை முறை பேசினீர்கள்?—'வழக்கு நீதிமன்றத்தில் இருப்பதால் அறிக்கை வெளியிடப்படவில்லை' என்று பல தடவை கூறிய பிறகும், திரும்பத் திரும்பப் பேசினீர்களே -- இதனால் எதைச் சாதிக்க முடியும் என்று கருதுகிறீர்கள்?

'அந்த அறிக்கையை தி.மு.க. மறைக்கிறது' என்று கருத்திருமனும், விநாயகமும் பேசுகிறார்கள்; 'ஏதோ இதில் பெரிய மூடுமந்திரம் இருக்கிறது' என்ற எண்ணத்தில் சேட்பார்களானால், 'அந்த நம்பிக்கை வீணாகும்' என்று நான் கூற விரும்புகிறேன்.

உலகத் தமிழ் மாநாட்டுக் கணக்கைப் பற்றிக் கூறினார்கள்; இந்தக் கணக்குகள், மூன்று குழுக்களால் நிர்வகிக்கப்பட்டு -- ஒப்புதல் பெற்ற 'ஆடிட்டர்'களால் பரிசீலனை செய்யப்பட்டு வெளியிடப்பட்டது. யாரைக் கொண்டு பரிசீலனை செய்ய வேண்டும் என்பதில் அரசுக்குப் பொறுப்பு இருக்கிறது; முழுத் தகவலும் தெரிவித்தான பிறகும், 'கணக்கு எங்கே?' என்று கேட்பது -- ஏதோ இலட்சக்கணக்கான ரூபாயை மறைத்துவிட்டார்கள் என்று பொதுமக்கள் கருதுவார்கள் என்று நினைத்துக் கொண்டு கூறுவார்களானால், அது தவறாகத்தான் முடியும்!

உலகத் தமிழ் மாநாட்டுக்கென்று தமிழகத்திற்கு வந்திருந்த பல்வேறு நாட்டு மக்கள், மாநாட்டுச் சிறப்பைப் பாராட்டியிருக்கிறார்கள்; 'தமிழகத்தின்—தமிழினத்தின் எதிர்காலத்திற்குப் பலனளிக்கக்கூடியது இந்த மாநாடு' என்று பாராட்டினார்கள்.

உலகத் தமிழ் மாநாட்டையொட்டித் தயாரிக்கப்பட்ட திரைப்படம், நியூயார்க்கிலேயும், வெலிங்டனிலேயும், மொரீஷியஸ் நாட்டிலும், பாரிஸ் -- ரோம் நாடுகளிலேயும் போட்டுக் காண்பிக்கப்பட்டு பல்லாயிரக்கணக்கான மக்களால் பாராட்டப்பட்டது.

மாநாட்டையொட்டி நடைபெற்ற ஊர்வலத்தில் தாய்மார்களும், குழந்தைகளும், பெரியவர்களும் ஏராளமாகக் கலந்துகொண்டதைக் கண்டு, தமிழர்களின் மொழிப் பற்றைப் பாராட்டினார்கள்.

அந்த மாநாடு தி. மு. கழகத்திற்குப் புகழ்ச்சின்னமாக அமைந்துவிட்டதைக் கண்ட பொறுமை உணர்ச்சியால் -- அதைத் தாங்கிக்கொள்ள முடியாத காரணத்தால் -- 'கழகத்தினருக்குக் கிடைக்கும் புகழ் மங்கவேண்டும்' என்று இப்படிப்பட்ட குற்றச்சாட்டுக்களைக் கூறுவீர்களானால், திலகர் சுயராஜ்ய நிதி போன்று காங்கிரசுக்காரார்களால் வசூலிக்கப்பட்டு--'நிதி மோசடிகள்' என்று மக்களால் கூறப்பட்டது பற்றி எங்களால் பேச முடியும்.

பூவராகவன் பேசும்போது, உலகத் தமிழ் மாநாட்டுக்காக நான்கைந்து விதமான டிக்கெட்டுகள் அச்சடிக்கப்பட்டிருந்ததாகக் கூறினார்.

நான்கைந்து காரியங்களுக்காக--நான்கைந்து விதத்தில் போடப்பட்டிருக்கின்றன; உடனே இந்தத் தரப்பிலிருந்து வேறு பல டிக்கெட்டுகள் காட்டப்பட்டன; 'நிரூபிக்க முடியுமா' என்று ஒருவரையொருவர் குற்றச்சாட்டுகளைப் பரிமாறிக்கொள்வதும், அதற்காக நீதி விசாரணை கோருவதும் தேவையற்றவைகளாகும்.

எங்களுக்குக் கிடைக்கும் பெருமையை உங்களால் தாங்கிக் கொள்ள முடியவில்லை. 20 ஆண்டுக்காலம் திக்குத் தெரியாத காட்டில் தவித்துக்கொண்டிருந்தவர்கள் நீங்கள்! 'ஆட்சிக்கு இவர்கள் வந்துவிட்டார்களே' என்ற ஆத்திர உணர்ச்சியால் அங்கலாய்க்கிறீர்கள்—பதவி பறிபோய் விட்டதால் பதறுகிறீர்கள்!

விநாயகம், தனிப்பட்ட முறையில் என்மீது அன்புகொண்டவர். அவர் என்னிடம் வந்து மெல்லிய குரலில், 'ஆண்டால் நன்றாக ஆளுங்கள்; இல்லாவிட்டால் விட்டுவிட்டுப் போங்கள்' என்றார். ஒன்று — அவருக்கே அப்படிச் சொல்வது பிடிக்காத காரணத்தாலும், யாரோ சொல்லச் சொல்லி சொல்வதாலும் அப்படிக் கூறியிருக்க வேண்டும்; இரண்டாவது — 'நான் சொல்லியா போய்விடப் போகிறீர்கள்' என்ற எண்ணத்தில் கூறியிருக்க வேண்டும்; மூன்றாவதாக — 'உள்ளம்' என்பது இருப்பதால், அப்படிச் சொல்லியிருக்கலாம்!

எதிர்க் கட்சித் தலைவர் கருத்திருமன் அவர்கள் துணிவை வரவழைத்துக்கொண்டு, 'இந்த அரசு, செயலற்ற—துணிவற்ற—நேர்மையற்ற அரசு' என்றார்!

'செயலற்ற சர்க்கார்' என்று கூறிவிட்டால் — 'திறமையற்ற சர்க்கார்' என்று கூறிவிட்டால், 'ஓகோ' என்று மக்கள் பாராட்ட வேண்டும் என்ற சுவைக்காகக் கூறியிருப்பாரானாலும், தமிழறிந்தவர்கள் இந்தச் சொற்களிலுள்ள முரண்பாட்டை அறிவார்கள்!

'செயலற்ற சர்க்கார்' என்றால், 'அதனிடம் எப்படித் திறமையை எதிர்பார்க்க முடியும்?' என்று கேட்க முடியும்!

எதிர்க் கட்சித் தலைவருக்கு, தாய்மொழி தமிழல்ல; கன்னடம்; ஆகவே, இப்படிப்பட்ட வார்த்தைகளை எச்சரிக்கையாகப் பயன்படுத்த வேண்டும்.

'கறுப்புச் சுண்ணாம்பு—வெள்ளை மஞ்சள்—கசக்கும் சர்க்கரை' என்றெல்லாம் பயன்படுத்தக் கூடாது!

'கம்ப இராமாயணத்தை நன்கு கற்றவர்' என்று நாட்டு மக்களிடையே ஒரு நம்பிக்கை இருக்கிறது அந்த எண்ணத்தில் மண் போட வேண்டாம் என்று கேட்டுக் கொள்கிறேன்.

ஒரு சர்க்கார், 'நம்பிக்கைக்கு உரியதுதானா' என்பதை ஆராய்ந்து பார்க்க 15 மாத காலம் போதிய காலம்தானா—என்பதனை, காங்கிரசுக்காரார்கள் எண்ணிப் பார்க்க வேண்டும்.

இடமறிதல்—காலமறிதல்—அளவறிதல் — வகையறிதல் — என்பதையெல்லாம் அறிந்து காரியத்தில் இறங்கவேண்டும்.

'கழக அரசின்மீது மாசு கற்பிக்க வேண்டும்' என்ற ஒரே நோக்கத்திற்காக இந்தத் தீர்மானம் கொண்டு வரப்பட்டிருக்கிறதே தவிர, 'ஒரு குற்றச்சாட்டுக்கும் போதிய ஆதாரமில்லை' என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நீங்கள் போகிற போக்கு, நீங்கள் மீண்டும் ஆட்சிப் பீடத்திற்கு வரும் நிலையில் இல்லை!

"சுதந்திராக் கட்சியும், கம்யூனிஸ்டுக் கட்சியும், பிற கட்சிகளும், பத்திரிகைகளிலேயும் மேடைகளிலேயும் ஒரு விதமாகக் கருத்துக்களை வெளியிடுகிறார்கள்; இங்கே பேசுகிறபோது வேறுவிதமாகப் பேசுகிறார்களே" என்று கூறுகிறார்கள்.

தோழமைக் கட்சியினராக இருந்தாலும், குற்றங்குறைகளைக் கூறக் கடமைப்பட்டிருக்கிறார்கள்; அவர்கள் தருகின்ற திருத்தங்களைக் கேட்டுக்கொள்ளவும் நாங்கள் தயாராக இருக்கிறோம்; ஆனால், அவர்கள் எது சொன்னாலும் ஏற்றுக்கொள்வோம் என்று அவர்களும் எதிர்பார்க்க மாட்டார்கள்!

குற்றங்களைச் சொன்னவுடனே, 'ஓகோ; விரோதிகளாகிவிட்டார்கள்; நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டுவந்தால் நம் பக்கம் வந்துவிடுவார்கள்' என்று கருதுகிறீர்கள்!

யாரோடு சேர்ந்தாலும் சேருவார்களே தவிர, ஆண்டவன்மீது ஆணையாக உங்களோடு மட்டும் சேரமாட்டார்கள்!

அவர்கள் குற்றஞ்சாட்டிப் பேசும் போதும், 'காங்கிரசுப் பாணியிலே செல்கிறீர்களே' என்று பேசுகிறார்கள்!

மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டம் தோல்வியடைந்துவிட்டது என்பதனை, பெரும் பெரும் பொருளாதார நிபுணர்களும், காமராசரும், சுப்பிரமணியமும்கூட ஒப்புக்கொண்டிருக்கிறார்கள்.

நான்காவது திட்டம் திடீரென்று நிறுத்தப்பட்டுவிட்டது. இதனால் ஏற்படும் விளைவுகளைப் பற்றி எடுத்துரைத்த போதெல்லாம் கேலி செய்தார்கள்! விட்ட இடத்திலேயிருந்து நிறுத்தினார்கள்! இந்த நிலையில், எப்படிப் புதிதாகத் தொழில்கள் வளரும்?

காலையும் கையையும் கட்டிவிட்டு, 'ஏன் ஓடவில்லை' என்று கேட்பதற்குச் சமம்தான்—'எங்கே புதிய தொழில்கள்' என்று கேட்பதும்!

இந்த நிலையிலும், தமிழகத்தில், 1968 சனவரியிலிருந்து மார்ச் வரையில் தனிப்பட்ட தொழில் துறை அனுமதிக்காக 32 பேர் மனு போட்டிருந்தார்கள்; ஆனால் காங்கிரசு ஆளும் ஆந்திரத்தில் 12 பேர்கள்தான் தொழில்களை நடத்த முன்வந்தார்கள்.

32 பேர், தொழில்களை நடத்த அனுமதி கோருகிறார்களென்றால், இது தொழில் வளர்ச்சிக்கு அறிகுறியில்லையா?

மாலை 6-மணிக்குமேல் கடைகள் எல்லாம் மூடப்படுகின்றன; வியாழக்கிழமை தொழிலகங்கள் எல்லாம் அடைக்கப்படுகின்றன; இவற்றைப் பார்த்து உடனே மறுநாள் காலை வந்து, 'பார்த்தீர்களா; தொழில்கள் நிலைநின்றுவிட்டன' என்றால், அது பொருளற்றது!

முதலாளிகள், காங்கிரசுமீது நம்பிக்கையுள்ளவர்கள்! வேறு கட்சி ஆட்சி நடத்தினால், தொழில்களை நடத்தமாட்டார்கள் என்று கூறமுடியுமா? எங்களுக்கும்---அவர்களுக்கும் நிதியில் தொடர்பு இருக்கிறது.

நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டுவந்தால்தான், மக்களுக்கு இந்த அரசின்மீது ஆர்வம் பிறக்கும்.

கருத்திருமன், 'இந்த அரசை முதலாளிகள் ஆதரிக்கமாட்டார்கள்' என்று கூறுகிறார்; ஆகவே 'நாம் ஆதரிப்போம்' என்பார்கள்; ஆக, இதனால் இலாபமே தவிர எங்களுக்கு நட்டமேதுமில்லை!

எதிர்க் கட்சித் தலைவர், 'தி.மு.க. அரசுக்கு தொழில் துறையில் நிலையான --- தெளிவான கொள்கை இல்லாததால்தான் இந்தச் சிக்கல்' என்கிறார்.

ஆனால், அவரால் மதிக்கப்படுகின்ற--அவரால் ஏற்றுக்கொள்ளப்படுகின்ற தொழில் துறையில் அனுபவமிக்க வெங்கட்ராமன் அவர்கள், 'தி.மு.க.-வின் தொழிற் கொள்கை சிறப்பான முறையில் இருக்கிறது' என்று பேசியிருக்கிறார்.

கருத்திருமன் சொன்னபோது கொஞ்சம் வருத்தமடைந்த நான் வெங்கட்ராமன் கருத்தைக் கேட்டு நிம்மதியடைந்தேன்.

'சொல்ல வேண்டியவர் சொல்லிவிட்டார்; விவரம் தெரியாதவர் சொன்னதற்காக வருந்த வேண்டாம்' என்று கூறிக் கொண்டேன். ஆகவே, விவரமறிந்து பேசவேண்டும்.

'விவரம் கிடைக்கவில்லையே' என்று கூறுவார்களேயானால், அதற்காக நான் வருத்தப்படுகிறேன். விவரம் கிடைக்காவிட்டால் எதையாவது பேசித்தானே ஆகவேண்டும்?

இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானம் பற்றிக் குறிப்பிடுபோது, 'அண்ணாதுரை மந்திரி சபையின்மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம்' என்று கூறியிருக்கிறார்கள்.

ஆனால், 1957–58-ல் முதுகுளத்தூரில் நடைபெற்ற கலவரத்தின்போது காமராசர் முதலமைச்சராக இருந்தார். அப்போது கொண்டுவரப்பட்ட நம்பிக்கையில்லாத் தீர்மானத்தின் போது, 'காமராசர் அமைச்சரவையின்மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம்' என்றிருந்ததில் காமராசர் பெயரை நீக்கிவிட வேண்டுமென்று நான் வற்புறுத்தினேன்; அதை, அரசியல் கண்ணியமாகக் கருதினேன்,

1967–68-ஆம் ஆண்டுத் திட்டத்திற்காகக் கேட்ட பணத்தில், 'ரூ. 84.99 கோடிக்குமேல் திட்டம் போடக்கூடாது' என்று மத்திய அரசு வற்புறுத்தியது. ஆனால் இந்தச் செயலற்ற சர்க்கார்—திறமையற்ற சர்க்கார் ரூ. 92 கோடிக்குத் திட்டத்தை உருவாக்கியுள்ளதே--இது, திறமைக் குறைவுக்கு எடுத்துக்காட்டா -- செயலற்ற தன்மைக்கு எடுத்துக்காட்டா என்பதை எண்ணிப்பார்க்க வேண்டும்.

அரசியல் காழ்ப்பினால் உள்ளத்தைப் பழுதாக்கிக்கொண்டவர்கள் இதை ஏற்கமாட்டார்கள்!

556 சிறு நீர்ப்பாசனத் திட்டங்கள் நிறைவேற்றுவதுதான் இலக்கு; ஆனால் 749 சிறிய நீர்ப்பாசனத் திட்டங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன.

10 ஆயிரம் ஆழ்கிணறுகள் இலக்கு; ஆனால், 14,266 கிணறுகள் வெட்டப்பட்டுள்ளன.

260 டிராக்டர்கள் தர வேண்டுமென்பது இலக்கு; ஆனால், 294 டிராக்டர்கள் தரப்பட்டுள்ளன.

மீனவர்களின் தேவைகளை நிறைவேற்ற—அவர்களுக்குப் படகு, வலை போன்ற உதவிகள் தர ரூ. 40 இலட்சம் போதும் என்று திட்டமிடப்பட்டது; ஆனால், ரூ. 113 இலட்சம் செலவிடப்பட்டது.

532 புதிய பஸ்கள் தேசியமயத் திட்டத்தின் அடிப்படையில் அமுலுக்குக் கொண்டுவரப்பட்டன.

கல்வித் துறைக்கும் அதிகத் தொகை செலவழிக்கப்படுகிறது.

பள்ளிகளில் பிள்ளைகளைச் சேர்க்கும் எண்ணிக்கையும் வளர்ந்திருக்கிறது.

இத்தனைப் புள்ளிவிவரங்களும் இந்த அரசின் சாதனையைக் குறிப்பிடத்தான் சுட்டிக்காட்டுகிறேன்.

அரசியல் காழ்ப்பு -- இருந்ததை இழந்ததால் ஏற்பட்ட எரிச்சல் -- அதன் காரணமாகத்தான் இப்படியெல்லாம் காங்கிரசுக்காரர்களால் பேசப்படுகிறது!

உலகத் தமிழ் மாநாட்டு நிதியிலிருந்து 9 இலட்ச ரூபாய் தமிழகத்திலுள்ள மூன்று பல்கலைக் கழகத்திற்குத் திருக்குறள் ஆராய்ச்சிக்காகத் தரப்பட்டிருக்கிறது. தமிழ் வளர்ச்சிக்கென்று 6 இலட்ச ரூபாய் மலருக்காகச் செலவிடப்பட்டு, அது திரும்பி வரும் நிலையில் இருக்கிறது.

ஒன்பது இலட்சம் ரூபாயை, 'திருக்குறள் ஆராய்ச்சி' என்ற நல்ல காரியத்துக்காகப் பயன்படுத்தியிருக்கிறோமே--ஒரு பாராட்டு--மகிழ்ச்சி தெரிவிக்கப்பட்டதா?

இப்படிப்பட்ட நல்ல காரியத்துக்காகப் பணத்தைப் பயன்படுத்தினோமே--அதற்காக இந்த அரசின்மீது நம்பிக்கை இல்லையா?

ஆகஸ்டு முதல் தேதி நடந்த நிகழ்ச்சியில், 600 பேர் தாக்கப்பட்டதாகக் கூறுகிறீர்கள்! 300 பேர்–400 பேர்–500 பேர்–என்று படிப்படியாக நாளுக்கு நாள் வளர்ந்து, 600 பேராகக் கூறப்படுகிறது. இது சம்பந்தப்பட்ட முழுத் தகவலையும் நான் திரட்டி வைத்திருக்கிறேன்.

அடிபட்டவர்கள் மூன்று பேராக இருந்தாலும் அதற்காக நான் வருத்தப்படக்கூடியவன்; இதில் தொகை பெரிதல்ல!

நாங்களும் பல்வேறு கொடுமைகளுக்கு ஆளாக்கப்பட்டவர்கள்! யாரையும், 'அடிபடட்டும்' என்று சொல்லமாட்டோம்!

முதல் தேதியன்று மருத்துவமனையில் 158 பேர் அனுமதிக்கப்பட்டார்கள்; நாளுக்கு நாள் அவர்கள் சிகிச்சை பெற்று வீட்டுக்கு அனுப்பப்பட்டு, 22-ந் தேதி 6-பேர்தான் மருத்துவமனையில் இருந்தார்கள். இதை மிகப் பயங்கரமான நிகழ்ச்சியாகக் காங்கிரசு நண்பர்கள் சித்தரித்துவிட்டார்கள்!

இதனால், 'தடியடி செய்தது நியாயம்' என்று நான் பேசவில்லை. பல அதிகாரிகளும் அடிபட்டிருக்கிறார்கள்!

'போலீசு உடையில் யாரோ தாக்கினார்கள்' என்று ஒரு குற்றச்சாட்டு கூறப்பட்டது. எந்த ஈனத்தனமான ஆட்சியிலும் இப்படி நடக்காது! போலீசு உடையை மற்றவர்கள் போட்டாலே சட்டப்படி குற்றமாகும்!"

நடக்க இருப்பவை

30--8--68

மம்சாபுரம்

தி. மு. க. சார்பில் மாலை 7-மணிக்கு மந்தைத் திடலில்; தலைவர்: ச. ஐயனார்; பேசுவோர்; ஏ.வி.பி.ஆசைத்தம்பி எம்.எல்.ஏ. மற்றும் பலர்.

31--8--68

புதியம்புத்தூர்

தி. மு. க. சார்பில் மாலை 7-மணிக்கு டி.டி.டி.ஏ. ஆரம்பப் பள்ளி முன்புள்ள திடலில்; தலைவர்: இ. துரைசாமி; படத் திறப்பாளர்: இரா. கிருஷ்ணன்; பேசுபவர்: ஏ. வி. பி. ஆசைத் தம்பி எம்.எல்.ஏ.

கழகத் தேர்தல்

வழக்குத் தொடுத்த தோழர்கள் பொதுச்செயலாளரிடம் மன்னிப்புக் கோரியுள்ளனர்

கழகத் தேர்தலையொட்டிய பிரச்சினைகளுக்கு முறைப்படி பொதுச் செயலாளர் அறிஞர் அண்ணா அவர்களிடம் முறையிட்டுத் தீர்வு காண்பதற்குக் கழகச் சட்ட திட்டத்தில் வழிவகை -- வாய்ப்பு ஆகியவை நிரம்ப இருந்தும், அதற்கு மாறாக வழக்குத் தொடுத்து கழகக் கட்டுக்கோப்புக்குப் புறம்பாகச் செயல்பட்ட கீழ்க் காணும் தோழர்கள், தங்களின் தவற்றினை உணர்ந்து வருந்தியும், தொடுத்த வழக்குகளைத் திரும்பப் பெற்றும் பொதுச் செயலாளர் அறிஞர் அண்ணா அவர்களிடம் மன்னிப்புக் கோரி மடல் வரைந்துள்ளனர்.

அந்த மடல்கள் பொதுச்செயலாளர் அவர்களின் பரிசீலனையில் இருந்து வருகின்றன.

குமரி மாவட்டம்

நாகர்கோவில்	கலைக்குமார்
,,	இர்வின் சிங்
,,	வில்லவன் கோதை

நீலகிரி மாவட்டம்

கூடலூர் அப்துல் ரகிமான்

—தலைமைக் கழகம் (தி மு.க.)

காரைக்கால் வட்ட தி. மு. க. தேர்தல்

ஏற்கனவே அறிவிக்கப்பட்டிருப்பதற்கேற்ப காரைக்கால் வட்ட தி. மு. கழகத்தின் எல்லாப் பொறுப்புகளுக்குமான தேர்தல்கள் 5-9-68 வியாழக் கிழமை காலை 10-மணிக்கு காரைக்கால் பயணிகள் விடுதியில் நடைபெறும்.

—தலைமைக் கழகம் (தி.மு.க.)

திராவிட முன்னேற்றக் கழகத்திற்காக, திரு. இரா. செழியன் எம்.ஏ., எம்.பி., அவர்களை ஆசிரியராகவும், வெளியிடுபவராகவும், அச்சிடுபவராகவும் கொண்டு [illegible] அச்சகத்தில் (24, [illegible] தெரு, சென்னை-13) [illegible] வெளியிடப்பெற்றது.